**பொதுவான பொறுப்பேற்புப் கடிதம் / நட்டோத்தரவாத மீள் சேகரிப்பு / உண்டியல்களைக் கைமாற்றல்**

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி
கம்பெனி பதிவு இல. PQ 27 20……………… கொழும்பில்

இல. 40 நவம் மாவத்தை,
கொழும்பு 02

அன்புள்ள ஐயரீர்,

1. இணையுறு பிணைப்பொறுப்புக்களுடன் அல்லது இணையுறு பிணைப்பொறுப்புக்கள் இன்றி என்னால் / எம்மால் வரையப்பட்ட அல்லது ஏறறுக்கொள்ளப்பட்ட அல்லது புறக்குறிப்பிடப்பட்ட மாற்றுண்டியல் அல்லது மாற்றுண்டியல்களை உமது வங்கி எனது / எமது கோரிக்கையின் பேரில் என்னிடமிருந்து / எம்மிடமிருந்து காலத்துக்குக்காலம் கொள்வனவு செய்வதனை, எனக்கு / எமக்கு கழிப்பனவு செய்வதனை அல்லது கைமாற்றுவதனைக் கருத்திற்கொண்டு, நிருபத்தில் அடங்கியுள்ள விதிப்புகள் தொடர்ந்திருப்பதாகவும் நிலைபெயரக்கூடியதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்; அக்கொடுக்கல்வாங்கல்களில் அத்தகைய மாற்றுண்டியல்கள் எந்நேரத்திலும் ஒன்றில் நேரடியாக அல்லது வேறு ஆட்களினூடாக என்னால் / எம்மால் உம்முடன் பேச்சுவார்த்தை செய்யப்படலாம் அல்லது உமக்கு விற்கப்படலாம் என்பதுடன் இந்நிருபம் மற்றும் இதன்கீழான எனது / எமது கடப்பாடுகள் முழுமையாக வலுவிலிருக்கும் அத்துடன் உம்மால் எழுத்தில் இரத்துச் செய்யப்படும் வரை பயனுறும்.

2. நீர் தகுதியானதென கருதக்கூடிய ஏதேனும் ஆபத்திலிருந்து அத்தகைய ஏதேனும் மாற்றுண்டியலுக்காக அல்லது எவையேனும் மாற்றுண்டியல்களுக்காக இணையுறு பிணைப்பொறுப்பாக அமைகின்ற எவையேனும் பண்டங்களைக் காப்புறுதிசெய்வதற்கும் அத்தகைய மாற்றுண்டியல் அல்லது மாற்றுண்டியல்கள் தொடர்பில் எனக்கு / எமக்கு அறவிடப்படற்பாலதான தொகைக்கு அத்தகைய காப்புறுதிகளின் கட்டுப்பணங்களையும் செலவுகளையும் சேர்ப்பதற்கும் அத்தகைய பண்டங்களின்மீது வேறு எவையேனும் உரிமைக்கோரிக்கைகளுக்கு முன்னுரிமையாக அவற்றின் மேல் அல்லது எனக்கு / எமக்கு / உமக்கு அல்லது அவற்றைச் செலுத்தும் வேறு ஆள் அல்லது ஆட்களுக்கு எதிராக அத்தகைய

கட்டுப்பணங்களினதும் செலவுகளினதும் தொகையை நாடுவதற்கும் கப்பற்கேள்வு, காப்புறுதி மற்றும் செலவுகளை கொடுப்பனவு செய்வதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய பண்டங்களின் ஏதேனும் பாகத்தை விற்பனை செய்வதற்கும் பொதுவாக அத்தகைய வழிமுறைகளை எடுப்பதற்கும் தரகுப்பணத்துக்கான அத்தகைய விதிப்பனவுகளைச் செய்வதற்கும் வணிகர் ஒருவருக்கும் அவரது தொடர்பாளருக்கும் இடையிலான சாதாரண விடயங்களில் போனறு ஆனால் மேற்கொள்ண்டு அல்லது வேறுவகையாக அல்லாமல் அத்தைகய முறையில் வகைகூறுவதற்கும் மேற்கூறப்பட்டவாறு (அவ்வாறு செய்வதனை கட்டாயமாக்குவதற்கான வகையில் அல்லாமல்) உமக்கு அல்லது உமது அலுவலர்களுள் எவரேனும் ஒருவருக்கு அல்லது முகவர்களுக்கு அல்லது அப்போதைக்கு அத்தகைய ஏதேனும் உண்டியலை அல்லது எவையேனும் உண்டியல்களை வைத்திருப்பவர்களுக்கு நான் / நாம் அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம். அத்துடன் ஏதேனும் பொது அல்லது தனியார் கப்பற்துறைமேடை அல்லது பண்டகசாலையை ஆட்சேபிக்கும் உமது மேலோங்கும் உரிமைக்கு அமைய உண்டியல்களை வரைந்தவர்கள் அல்லது ஏற்றுக்கொள்பவர்களினால் தெரிவுசெய்யப்பட்ட அத்தகைய கப்பற்துறை மேடை அல்லது பண்டகசாலையில் பண்டங்களை களஞ்சியப்படுத்துவதற்கு நான் / நாம் சம்மதமளிக்கின்றேன் / சம்மதமளிக்கின்றோம்.

3. முதிர்வின்போது ஏதேனும் மாற்றுண்டியல் அல்லது மாற்றுண்டியல்களுக்கான கொடுப்பனவின்மீது, அத்தகைய ஏதேனும் உண்டியல் அல்லது உண்டியல்களின் உரிய கொடுப்பனவுக்காக இணையுறு பிணைப்பொறுப்பாக உமக்கு கையளிக்கப்பட்ட ஆவணங்கள் அவற்றின் உண்டியல் ஏற்போருக்கு அல்லது ஏற்றுக்கொள்பவர்களுக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும் என்ற பொருள்படவும் அத்தகைய அதிகாரவளிப்பு அத்தகைய ஏதேனும் உண்டியல் அல்லது உண்டியல்கள் நடைமுறையில் இருக்கும் போது உண்டியல் ஏற்போர் கொடுப்பனவை நிறுத்தினால், வங்கிமுறிந்தவராக வந்தால் அல்லது ஒழித்துக் கட்டுகைக்கு உட்பட்டால் அடுத்து இதனகத்துப்பின்னர் கொடுக்கப்படும் தத்துவத்துக்கு எவ்வாறாயினும் அமைய ஏற்றுக்கொள்வதற்கான ஏற்றுக்கொள்கை விடயங்களுக்கும் நீடிக்கப்படுவதாக கொள்ளப்படுதல் வேண்டும் என்ற பொருள்படவும் அவற்றுக்கான நிபந்தனையுடனான ஏற்புக்களை எடுப்பதற்கு மேற்கூறப்பட்டவாறு உமக்கு, அல்லது உமது அலுவலர்களுள் எவரேனும் ஒருவருக்கு அல்லது முகவர்களுக்கு அல்லது அப்போதைக்கான ஏதேனும் மாற்றுண்டியலை அல்லது மாற்றுண்டியல்களை வைத்திருப்பவர்களுக்கு நான் / நாம் இத்தால் அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம்.

4. நான் / நாம் மேற்கூறப்பட்டவாறு ஏதேனும் மாற்றுண்டியலின் அல்லது மாற்றுண்டியல்களின் முதிர்வுக்கு முன்னரான ஏதேனும் நேரத்தில் அல்லது

நேரங்களில் அவ்வாறு செய்வதனை கட்டாயமாக்குவதற்கான வகையில் அல்லாமல் அத்தகைய பண்டங்களின் விலைப்பட்டியல் செலவின் அல்லது அதற்கு எதிராக வரையப்பட்ட மாற்றுண்டியல் அல்லது மாற்றுண்டியல்களின் விகிதாசாரப்படியான தொகையை கொடுப்பனவு செய்வதன் மீது எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு நீர் அல்லது அத்தகைய மாற்றுண்டியல்களை ஏற்றுக்கொள்பவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விரும்பத்தக்கது என எண்ணுகின்றவாறான அத்தகைய முறையில் அத்தகைய பண்டங்களின் பகுதியளவிலான ஒப்படைப்பை அல்லது பகுதியளவிலான ஒப்படைப்புக்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம்.

5. மேற்கூறப்பட்டவாறான ஏதேனும் மாற்றுண்டியல் அல்லது மாற்றுண்டியல்களின் முன்வைப்பின் மீதான ஏற்பில் அல்லது முதிர்வின் மீதான கொடுப்பனவில் தவறுகை செய்யப்படுவதன்மீது எதிர்ப்பை விட்டுக்கொடுப்பதற்கும் அத்தகைய தவறுகையின் விடயத்தில் அல்லது அத்தகைய ஏதேனும் உண்டியல் அல்லது உண்டியல்கள் நடைமுறையில் இருக்கும்போது உண்டியல் ஏற்போர் அல்லது ஏற்றுக்கொள்பவர்கள் கொடுப்பனவை இடைநிறுத்துகின்ற, வங்கிமுறிந்தவராக வருகின்ற அல்லது ஒழித்துக்கட்டளை செய்துகொள்வதனையிட்டு எத்தகையதுமான எவையேனும் நடவடிக்கைகளை எடுக்கின்ற விடயத்தில் அத்துடன் நிபந்தனையுடன் அல்லது முற்றாக ஏற்றுக்கொள்ளப்படினும் நீர் அல்லது அத்தகைய வைத்திருப்பவர்கள் தகுதியானதெனக் கருதுகின்ற அத்தகைய நேரத்திலும் அத்தகைய முறையிலும் அதன் கொடுப்பனவுக்கு இணையுறு பிணைப்பொறுப்பாக அமைகின்ற எல்லாப் பண்டங்களையும் அல்லது அவற்றுள் ஏதேனும் பாகத்தை விற்பனைசெய்வதற்கும் வழமையான தரகுப்பணத்தையும் விதிப்பனவுகளையும் கழிப்பனவுசெய்ததன் பின்னர், தேறிய வரும்படிகளை மீள்பரிமாற்றங்கள் மற்றும் விதிப்பனவுகளுடன் அத்தகைய உண்டியல் அல்லது உண்டியல்களின் கொடுப்பனவில் பயன்படுத்துவதற்கும் உமக்கு அல்லது உமது அலுவலர்களுள் எவருக்கும் அல்லது முகவர்களுக்கும் அல்லது அத்தகைய உண்டியலை அல்லது உண்டியல்களை அப்போதைக்கு வைத்திருப்பவர்களுக்கும் நான் / நாம் அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம்; மீதி ஏதேனும் இருப்பின் அது, உமது அல்லது அவர்களது கைகளில் இருக்கக்கூடிய பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட அல்லது வேறு வகையாகவுள்ள எனது / எமது உண்டியல்களுள் வேறு ஏதேனும் ஒன்றுக்கு எதிராக அல்லது உமக்கு அல்லது அவர்களுக்கு உள்ள எனது / எமது வேறு ஏதேனும் கடன் அல்லது பொறுப்புக்கு எதிராக உமது அல்லது அவர்களது விருப்பத்தெரிவிலும் அதற்கு அமையவும் முறையான திறத்தவர்களுக்கு கணக்கிடப்படுவதற்கு இடப்படுதல் வேண்டும். ஏதேனும் நேரத்தில் காப்புறுதிசெய்யப்பட்ட கப்பல் அல்லது பண்டங்களுக்கு இழப்பு ஏற்படுகின்ற விடயத்தில், காப்புறுதிப் பத்திரம் அல்லது பத்திரங்களை தேறிப்பெறுவதற்கும் பண்டங்களின் விற்பனையின் மீதானவாறு வரும்படிகளின் மீது அதே தரகுப்பணத்தை

விதிப்பனவு செய்வதற்கும் இதனகத்து முன்னர் கடைசியாக ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேற்கூறப்பட்டவாறான அத்தகைய கழிப்பனவுகளின்பின்னர் தேறிய வரும்படிகளை பயன்படுத்துவதற்கும் உமக்கு அல்லது அதனை வைத்திருப்பவர்களுக்கு நான் / நாம் அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம் அத்துடன் காப்புறுதிப் பணம் என்னால் / எம்மால் பெறப்படின் அது உமக்கு உடனடியாக செலுத்தப்படுதல் வேண்டும் எனவும் அவ்வாறு செலுத்தப்படும் வரை உமக்கு நம்பிக்கைப்பொறுப்பாக உமது சார்பாக என்னால் / எம்மால் வைத்திருக்கப்படுதல் வேண்டும் எனவும் நான் / நாம் பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம். இவ்வாசகத்தின்கீழ் தேறிப்பெறப்பட்ட எல்லாப் பணங்களும் இதன்கீழ் உமக்கு வருமதியாகவுள்ள எவையேனும் மற்றும் எல்லாப் பணங்களையும் கொடுப்பனவு செய்வதற்காக உமக்கு சார்பாக விசேடமாக இத்தால் விதிப்பனவு செய்யப்படுகின்றதுடன் விதிப்பனவு செய்யப்படுவதாக கருதப்படுதலும் வேண்டும்.

6. அத்தகைய பண்டங்களின் தேறிய வரும்படிகள் அல்லது காப்புறுதிப் பத்திரம் அல்லது பத்திரங்களின் வரும்படிகள் அத்தகைய ஏதேனும் உண்டியலின் அல்லது உண்டியல்களின் தொகையை, மீள்பரிமாற்றல் மற்றும் விதிப்பனவுகளுடன் செலுத்துவதற்கு போதியதாக இல்லாத விடயத்தில், அதனை அல்லது அதன் மீதான ஏதேனும் பற்றாக்குறையை அறவிடுவதற்காக சொல்லப்பட்ட உண்டியல்களின் எவரேனும் புறக்குறிப்பிடுநர் அல்லது புறக்குறிப்பிடுநர்களுக்கு எதிரான எவையேனும் உரிமைக் கோரிக்கைகளுக்கு எவ்வாறாயினும் பங்கமின்றி, பற்றாக்குறைக்காக என் மீது / எம்மீது வரைவதற்கு விடயத்துக்கேற்ப உமக்கு அல்லது உமது அலுவலர்களுள் எவரேனும் ஒருவருக்கு அல்லது முகவர்களுக்கு அல்லது அப்போதைக்கு அத்தகைய உண்டியலை அல்லது உண்டியல்களை வைத்திருப்பவர்களுக்கு நான் / நாம் அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம்; அத்துடன் முன்வைப்பின் மீது அத்தகைய வரைவுகளை ஏற்றுக்கொள்வதற்கு நான் / நாம் ஈடுபடுகின்றேன் / ஈடுபடுகின்றோம் என்பதுடன் உம்மால் அல்லது அத்தகைய வைத்திருப்பவர்களினால் வழங்கப்பட்ட நடைமுறைக் கணக்கு விற்பனைக்கான மற்றும் நிலுவைகளுக்கான போதிய எண்பிப்பாக இருத்தல் வேண்டும் எனவும் புரிந்துகொள்ளப்படுகின்றது. வங்கியின் புத்தகங்களில் எனது / எமது வரவுக்கு இருக்கும் அல்லது எத்தகையதுமான ஏதேனும் கணக்கில் அல்லது கணக்கின் மீது உள்ள அல்லது நான் / நாம் அதன் பின்னர் உரித்துடையவராக/ உரித்துடையவர்களாக வருகின்ற அல்லது வரவேண்டிய வேறுவகையாக எனக்கு / எமக்கு சொந்தமாக அல்லது எனது / எமது கணக்கின்மீது அல்லது சார்பில் அதன் பின்னர் தேறிப்பெறக்கூடிய அல்லது சேகரிக்கப்படக்கூடிய அல்லது பெறப்படக்கூடிய ஏதேனும் பணத்தை, அத்தகைய கணக்கு / கணக்குகளிலிருந்து மிகையாகப்பெறும் அளவுக்கு வருமதியாகவுள்ள அல்லது மேற்கூறப்பட்டவாறு அத்தகைய

உண்டியல்கள் தொடர்பில் வருமதியாக வரக்கூடிய ஏதேனும் மீதியைக் கொடுப்பனவு செய்வதில் பயன்படுத்துவதற்கு நான் / நாம் மேலும் அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம். அத்துடன் எனது / எமது கணக்கிலிருந்து / கணக்குகளிலிருந்து மிகையாகப் பெறப்படுகின்ற பட்சத்தில், காலத்துக்குக்காலம் அதன் வழமையான தொழிலின்போது நீர் விதிப்பனவு செய்யக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் அல்லது வீதங்களில் அதன்கண் உள்ள வட்டியுடனும் (வட்டி மீதான மொத்த விற்பனவு வரவு வரி மற்றும் சட்டச்செலவுகள் உட்பட) அதனால் விளைவிக்கப்படும் செலவுதொகைகள், செலவுகள் மற்றும் விதிப்பனவுகள் எல்லாவற்றுடனும் சேர்த்து மிகையாகப் பெறப்பட்ட மீதியை கோரிக்கையின்மீது மீளச்செலுத்துவதற்கு நான் / நாம் பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம். ஆனால் இவ்வதிகாரவளிப்பு நீர் வங்கியாளராக ஒன்றில் இதன் ஏற்பாடுகள் எவற்றின் கீழும் அல்லது எவ்வகையினதுமாக வேறுவகையாக கொண்டிருக்கவேண்டிய வேறு எவையேனும் உரிமைகள், தத்துவங்கள் அல்லது சிறப்புரிமைகளுக்குப் பங்கமின்றி இருத்தல் வேண்டும். இதனாலும் முற்போந்த வாசகத்தினாலும் வழங்கப்பட்ட உரிமை மற்றும் தத்துவங்கள் முற்றானதாகவும் இல்லாதொழிக்கமுடியாததாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் இறப்பு, கடனிறுக்க வகையற்ற நிலை, வங்கிமுறிவு, கலைப்பு, ஒழித்துக் கட்டல், ஒடுக்குதல் மூலம் அல்லது இதன்கீழ் வங்கிக்கு எவையேனும் பணங்கள் வருமதியாக இருக்கின்ற காலமெல்லாம் வேறு ஏதேனும் செயல், காரணம் அல்லது காரணி அல்லது எத்தகையதுமான சூழ்நிலை காரணமாக இல்லாதொழிக்கப்படுதலோ அல்லது தீர்மானிக்கப்படுதலோ ஆகாது, அத்துடன் அதற்கு பயன் கொடுப்பதற்கு அந்நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான எல்லாவற்றையும் மற்றும் எத்தகையதுமானவற்றையும் செய்வதற்கு எனது / எமது அற்றோனியாக (அற்றோனிகளாக) அல்லது முகவராக (முகவர்களாக) வங்கியை இல்லாதொழிக்கமுடியாத வகையில் நான் / நாம் இத்தால் நியமிக்கின்றேன் / நியமிக்கின்றோம்.

7. மேலே சொல்லப்பட்ட விற்பனைத் தத்துவம் அத்தகைய ஏதேனும் உண்டியல் அல்லது உண்டியல்களின் முதிர்வுக்கு முன்னர் எந்நேரத்திலும் எழுந்திருந்தாலும் சரி அல்லது எழுந்திராவிடினும்சரி அதன் உண்டியல் ஏற்போர் அல்லது ஏற்றுக்கொள்பவர்களிடமிருந்து கொடுப்பனவை ஏற்றுக்கொள்வதற்கு தேவைப்படுத்தப்படின் அவ்வாறு செய்வதற்கும் கொடுப்பனவின் மீது ஏற்றுபொருட் பட்டியல்கள் மற்றும் கப்பலேற்றல் ஆவணங்களை அத்தகைய உண்டியல் ஏற்போருக்கு அல்லது ஏற்றுக்கொள்பவர்களுக்கு ஒப்படைப்பதற்கும் மேற்சொல்லப்பட்டவாறு உமக்கு அல்லது உமது எவரேனும் அலுவலருக்கு அல்லது அத்தகைய ஏதேனும் உண்டியலை அல்லது உண்டியல்களை அப்போதைக்கு வைத்திருப்பவர்களுக்கு நான் / நாம் மேலும்

அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம்; நீர் அல்லது அத்தகைய ஏதேனும் உண்டியல் அல்லது உண்டியல்களை வைத்திருப்பவர்கள் அக்காலத்துக்கு ஆண்டுக்கு ஐந்து சதவீதத்தை விஞ்சாத அதன் மீதான கழிப்பனவொன்றை அனுமதிக்கின்ற பட்சத்தில், அவை சம்பந்தப்பட்ட நாட்டில் அனுமதிக்கப்பட்ட குறுகிய வைப்புக்களுக்கான நடைமுறையில் உள்ள வீதத்துக் மேலாக ஆண்டுக்கு ஒன்று தசம் ஐந்து சதவீதத்தில் தொழிற்படக்கூடும்.

8. அத்தகைய இணையுறு பிணைப்பொறுப்புக்களை உமக்கு ஒப்படைத்தல் ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் அத்தகைய எவையேனும் உண்டியல்கள் மீதான உமது உரிமைகளைப் பாதித்தலாகாது என அல்லது அதன் மீது எடுக்கப்பட்ட ஏதேனும் வழி மேலேயுள்ளவாறு உமக்கான எனது / எமது பொறுப்பின் அளவுக்கு அத்தகைய பிணைப்பொறுப்புக்களுக்கான உமது உரித்தைப் பாதித்தலாகாது என மற்றும் இந்நிருபம் அதன் தொழிற்பாட்டிலும் பயனிலும் கடந்தகாலப் பயன்கொண்டதாக இருத்தல் வேண்டும் எனவும் என்னுடன் / எம்முடன் அல்லது இறப்பு, ஓய்வு, புதிய பங்காளர்களின் அறிமுகம் அல்லது காலத்துக்குக்காலம் எமது குழுவாக அமைகின்ற ஆட்களிலான வேறுவகையான ஏதேனும் மாற்றம் எவ்வாறிருப்பினும் குழுமத்துடன் அல்லது எந்த வேறு மகுடம் அல்லது குழுமத்தின்கீழ் எம்மால் கொண்டுநடாத்தப்படும் தற்போதைய தொழில் காலத்துக்குக்காலம் தொடரலாமோ அந்த வேறு மகுடம் அல்லது குழுமத்துடனான எல்லா இறந்தகால, தற்போதைய, எதிர்கால கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும் எனவும் பரஸ்பரம் உடன்பட்டுக்கொள்ளப்படுகின்றது, இக்கடிதம் மற்றும் இத்தால் வழங்கப்பட்ட தத்துவங்களும் அதிகாரவளிப்புக்களும் உம்முடன் மேற்கூறப்பட்டவாறு குழுமம் சார்பான உடன்படிக்கையாக நன்நிலையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும் அத்துடன் இதன்கீழான உண்டியலொன்றின் அல்லது உண்டியல்களின் ஒவ்வொரு பேச்சுவார்த்தையும் இவ்வுடன்படிக்கையின் நியதிகளை இணக்கும் வகையில் குழுமத்தினால் அல்லது அதன் சார்பாக ஒரு புதுப்பித்தலாக கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் நோக்கத்துக்காக உம்மால் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் தரகர் அல்லது ஏலவிற்பனையாளரின் தவறுகைக்காக நீர் பொறுப்பாதலாகாது எனவும் உடன்பட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. எனக்கு / எமக்கான எவ்விதக் குறிப்பீடுமின்றி அல்லது என்னிலிருந்து / எம்மிலிருந்து மேலதிக அதிகாரவளிப்பின்றி உம்மால் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட உள்நாட்டு / வெளிநாட்டு உண்டியல்கள் தொடர்பாக எவையேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் உம்மிடமிருந்து உரிமைகோரப்படக்கூடிய அல்லது உம்மீது செய்யப்படக்கூடிய எவையேனும் கோரிக்கைகளுடன் இணங்கியொழுகுவதற்கும் நான் / நாம் இல்லாதொழிக்கமுடியாதவகையில் உமக்கு அதிகாரமளிக்கின்றேன் / அதிகாரமளிக்கின்றோம் என்பதுடன் அவ்வாறு கொள்வனவு

செய்யப்பட்ட உள்நாட்டு / வெளிநாட்டு உண்டியல்களிலிருந்து உரிமைகோரப்பட்ட அல்லது அவற்றின் மீது செய்யப்பட்ட அத்தகைய எவையேனும் கொடுப்பனவுகள் அல்லது கோரிக்கைகள் உண்மையில் வருமதியாகவுள்ளதா அல்லது இல்லையா அல்லது எனக்கும் / எமக்கும் அத்தகைய உள்நாட்டு / வெளிநாட்டு உண்டியல்களை வரைபவர் அத்துடன் / அல்லது புறக்குறிப்பிடுநருக்குமிடையில் அத்தகைய ஏதேனும் பிணக்கு உள்ளதா அல்லது இல்லையா என விசாரணை செய்வது உம்மீது கடமையாதலாகாது எனவும் நான் / நாம் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம்.

10. என்னால் / எம்மால் வரையப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது புறக்குறிப்பிடப்பட்ட மாற்றுண்டியல்களை கொள்வனவு செய்வதற்கு, கழிப்பனவு செய்வதற்கு அல்லது பேச்சுவார்த்தை மூலம் பெறுவதற்கு எனது / எமது கோரிக்கையின் பேரில் நீர் உடன்படுவதனைக் கருத்திற்கொண்டு, அதனாலான ஏதேனும் விளைவுக்கு எதிராகவும் நீர் உறக்கூடிய அல்லது அடையக்கூடிய இழப்புக்கள், செலவுதொகைகள், சேதங்கள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் என்னால் / எம்மால் வரையப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது புறக்குறிப்பிடப்பட்ட மாற்றுண்டியல்களை காலத்துக்குக்காலம் கொள்வனவு செய்தல், கழிப்பனவுசெய்தல் அல்லது பேச்சுவார்த்தை மூலம் பெறுதல் சம்பந்தமாக அல்லது அவை தொடர்பாக அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், பொறுப்புகக்கள், உரிமைக்கோரிக்கைகள் மற்றும் கோரிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராகவும் உமக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கும் உமக்கு தீங்கேற்படாது வைத்திருப்பதற்கும் (முற்போந்தவைக்கு பங்கமின்றி) நான் / நாம் இத்தால் உடன்பட்டு பொறுப்பேற்கின்றேன் / பொறுப்பேற்கின்றோம்.

11. எவையேனும் ஒவ்வாமைகளைப் பொருட்படுத்தாமல் காலத்துக்குக் காலம் எனது / எமது ஆவண உண்டியல்களை நீர் பேச்சுவார்த்தை மூலம் பெறுவதனைக் கருத்திற்கொண்டு, நீர் அவ்வாறு செய்வதன் காரணமாக எழக்கூடிய இழப்புக்கள், செலவுகள் மற்றும் விளைவுகள் எல்லாவற்றுக்கும் எதிராக உமக்கு தீங்கேற்படாது வைத்திருப்பதற்கும் நட்டோத்தரவாதமளிப்பதற்கும் நான் / நாம் இத்தால் உடன்படுகின்றேன் / உடன்படுகின்றோம். இந்நட்டோத்தரவாதம், ஆவணங்களுக்கும் தொடர்புபட்ட கடன்பத்திரத்தின் நியதிகளுக்குமிடையில் எவையேனும் ஒவ்வாமை இருந்த போதும் உம்மால் பேச்சுவார்த்தை மூலம் பெறப்பட்ட கடன் பத்திரங்களின் கீழான உண்டியல்களையும் உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படுகின்றது.

தங்கள் விசுவாசமுள்ள,

| |
|---|
| ரூ. 200/- x 2<br>முத்திரைகள் |

20……….. ஆம் ஆண்டு …………… மாதம் ………… ஆந் நாள் திகதியன்று

சாட்சி :…………………………

சாட்சி :…………………………

பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றின் விடயத்தில், கம்பெனி இலச்சினையானது கம்பெனியின் அமைப்பக விதிகளுக்கு இணங்க இடப்பட்டு உரியமுறையில் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.